1969 மார்ச் 22]

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து ஆஸ்டின்பட்டியில் இருக்கின்ற க்ஷயரோக மருத்துவமனை குறித்துத்தான் இங்கே கனம் உறுப்பினரவர்கள் கேள்வி கேட்டிருக்கிறார்கள். ஆகவே, அந்த மருத்துவ மனையை இன்னும் விரிவுபடுத்தும்வகையில், அதிகப்படியான படுக்கை வசதிகளை ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், 102, 162 படுக்கைகளைக் கொண்ட இரண்டு அடிஷனல் வார்டுகளுக்குப் புதுக் கட்டடங்களைக் சட்டுவிக்க வேண்டுமென்றுதான் செயற்குறிப்பு இருக்கிறது. கனம் அங்கத்தினர் அவர்கள் கோரும் வேறு ஊரைப்பற்றி எந்தக் குறிப்பும் தற்போது என்னிடம் இருக்கவில்லை.

Refresher course in Library Science.

*419. *Q.*—Dr. H. V. HANDE: Will the Hon. the Minister for Education and Industries be pleased to state :—

(*a*) the reasons for conducting a Refresher course in Library Science in the Connemara Public Library ; and

(*b*) whether the Librarian of the said Library is paid any honorarium for conducting the course and, if so, why ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இம் மாநிலத்தின் பல்வேறு மாவட்டங்களில் உள்ள நூலகங்களில், புத்தகங்களை வகைப்படுத்தல், அட்டவணையிடுதல் ,முறைப்படுத்தல், படிக்கக் கொடுத்தல் முதலியவற்றின் நடைமுறைகளைச் சீரமைக்கவும் மாவட்ட நூலகக் குழுக்களின் கீழ்வரும் நூலகங்களில் நூலக வேலைமுறைகளின் நிலைமையைப் பொதுவாக மேம்படுத்தவும் I-ம் நிலை II-ம் நிலை நூலகக் காப்பாளர்களுக்குப் பொது நூலக வேலைமுறைகளில் நடைமுறைப் பயிற்சியளிக்கும்பொருட்டு, கன்னிமாரா பொதுநூலகத்தில் நூலகக் கலையில் நினைவூட்டுவகுப்பு ஒன்று நடத்தக் கருதப்பட்டுள்ளது,

(இ) இல்லை. இவ்வகுப்பு நடத்த நூலகக் காப்பாளருக்கு மதிப்பூதியம் எதுவும் கொடுப்பதில்லை.

Dr. H. V. HANDE: Is it a fact that the University itself offers a good course in Library Science and, if so, will not teaching the refresher course consume a good deal of the time of the Librarian of the Connemara Library and prevent him from doing his normal duties ? In view of this difficulty, will this Government think of appointing somebody else so that the Librarian will be able to look after library work and the work may not suffer for want of supervision ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, பல்கலைக்கழகத்திலும் Diploma in Library Science. பயிற்சி கொடுக்கிறார்கள். இது புத்தகங்களை வகைப்படுத்தல், அடுக்கி வைத்தல் முறைகளைப் பற்றி Grade II Librarian தேவை என்று ஒரு குழு பரிந்துரைசெய்திருக்கிறது. அதைக்கருதி ஏற்பாடு செய்யப்பட்டது. ஆனால் நடைமுறைக்குக் கொண்டுவரவில்லை. லைப்ரரியனுக்கு வேலைபளு இருக்காது என்று முடிவு செய்கிறது.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : தலைவரவர்களே, இன்று நூலகங்களெல்லாம் கல்வியொடு இணைந்திருக்கும் நிலைமைகளைப் பார்க்கிறோம். ஆகவே, கல்லூரிகளிலே படிக்கும் மாணவர்களைப் பகுதிநேர ஊழியர்களாக, லைப்ரரியனாக அமைக்கும் உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : பரிசீலிக்கவில்லை.

THIRU K. VINAYAKAM : Is any fee charged from the Librarians who come for this refresher course ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : தேவையான படிகள் கொடுக்கப் படுகின்றன.

DR. H. V. HANDE : The Minister said that the course has not yet commenced. What is the programme that the Government have for this course ? Do they intend to have the course throughout the year or during a part of the year ? Will the Minister give us some more details about the intended course ?

மாண்புமிகு திரு செ. மாதவன் : இந்த Refresher course மிகக்குறுகிய காலத்தில், இரண்டு வாரத்தில் நடத்தப்படுகிறது. இதனுல் வேலைப்பளு ஏற்பட்டு விடாது. பயிற்சி பெறுபவர்களுக்கு என்னென்ன படிகள் கொடுக்க வேண்டுமோ அதையெல்லாம் கொடுக்கிறோம்.

திரு. அ. மாரிமுத்து : தலைவரவர்களே, கிளை நூலகங்களில் புத்தகங்களில் மேல் உள்ள அட்டைகள் இல்லாமல் கிழிந்துபோய் படிப்பதற்கு வசதியற்ற நிலையில் இருப்பது அரசுக்குத் தெரியுமா? அதற்கு ஆவன செய்ய ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மேல் அட்டையிலே படிக்க வேண்டியது எதுவும் இருக்காது. புத்தகத்தில் உள்ளேதான் இருக்கும். அட்டைகள் கிழிந்துபோனுல் பைண்ட் செய்து அடுக்கி வைக்க இப்போது வசதிகள் இருக்கின்றன.

காஞ்சிபுரத்தில் தொல்பொருள் ஆராய்ச்சி

*420—வினு : **திரு. எஸ். ஜே. ராமசாமி :** மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினுவிற்கு விடையளிப்பாரா—

காஞ்சீபுரத்தில் உள்ள பாலிமேடு என்கிற பல்லமேட்டில் இந்த ஆண்டில் (1968) தொல்பொருள் ஆராய்ச்சி மேற்கொள்ளும் செயற் குறிப்பு ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இல்லை.

THIRU K. S. KOTHANDARAMIAH : There are a number of areas in our State where the Archaeological Survey Department has not gone. For example, a survey party went to Hosur taluk in Dharmapuri district in 1911. But, for the last forty-five years, the party has not gone there. I have come across nearly one hundred stone inscriptions. Dharmapuri district stands in a strategic position between Mysore tableland and the plains below. A reading of the stone inscriptions may shed light on a number of facts relating to South Indian History. Will the Hon. Minister kindly give instructions to the Archaeological Department to visit these places early ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தர்மபுரி மாவட்டத்தைப்பற்றி என்னிடத்திலே தகவல் இல்லை. ஆர்க்கியலாஜிக்கல் இலாகா ஒவ்வொரு மாவட்டமாக குறிப்பிட்ட பகுதிகளை எடுத்துக்கொண்டு இப்படிப்பட்ட புத்தகங்கள்கூடத் தயார் செய்கிருர்கள். நேற்றுக் கூட என்னிடத்தில் ஒரு புத்தகம் கொடுத்தார்கள். தஞ்சை மாவட்டத்திலே சோழர்களை